பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 17உ (2—9—67) சனி ★ வெளியூர்: ஆவணி 18உ (3—9—67) ஞாயிறு [இதழ்: 68

மாதவனின் மாபெரும் சாதனை:

ஒருமித்த பாராட்டுக்குரியவராகிறுர் தமிழகச் சட்ட அமைச்சர்

மொரார்ஜி என்ன-உலகமே அச்சுறுத்தினுலும் அயர்ந்துவிடமாட்டோம்

நேர்முகமாகவே மறைமுகமாகவே இந்தித் திணிப்பு என்பது நடைபெற இயலாதது

'இராஜிநாமாத் தத்துவம் உங்களுக்கும் ஒத்துவரும்'--'மொரார்ஜி தேசாய்'கட்கு மாதவன் விளக்கம்

டில்லியில் கழக அமைச்சர் உரிமைக்குரல்--கருத்து விளக்கம்

இந்தியத் தலைநகரில் இரண்டு நாட்களாக நடைபெற்று நேற்றுடன் முடிந்த அனைத்திந்திய சட்ட அமைச்சர் மாநாட்டில் முதல் நாள் பேசிய மொரார்ஜி தேசாயின் மொழி வெறி ஆர்ப்பாட்டத்துக்குத் தமிழகமே மனம் திறந்து 'சபாஷ்' என்று பாராட்டும் வகையில் தமிழக அமைச்சர் செ. மாதவன், தக்க விளக்கங்கள்—எச்சரிக்கைகள்—மறுப்புகள் தந்து பேசியிருக்கிறுர்.

நேற்றையத் தினம் அவர் பேசும்போதும், இந்தி மொழிப் பகுதி சட்டத்துறை அமைச்சர்கள் குறுக்கீடுகள் செய்திருக்கின்றனர்!

அதற்கு மத்தியில் நின்று அவர், முதல் நாள் பேசிய மொரார்ஜி தேசாய்க்கு மறுப்புத் தரும் வகையில்,

"மொரார்ஜி உட்பட உலகின் யாருடைய அச்சுறுத்தல்களுக்கும் பயந்துவிடமாட்டோம்"

என்று உரிமைக் குரல் கொடுத்துள்ளார்!

பிரிவினைக்கு அடையாளம்' எனக் கூறியிருக்கின்றனர்!

அதே இடத்தில்,

"நாங்கள் பிரிவினையை விரும்பவில்லை"

என்று விளக்கம் தந்திருக்கின்றுர்—தமிழகச் சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன்!

இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைக்கும் வகையில், "அரசியல் சட்டத்துக்குப் புறம்பாக, 'இந்தியை ஏற்கமாட்டோம்' என்று கூறுவதனுல், பதவியை இராஜினுமாச் செய்யுங்கள்" என்று கண்மூடிப் போக்கில் பேசியபிற்கு மறுப்பு அளிக்கும் வகையில் சரியான பதிலடி கொடுத்திருக்கிறுர் மாதவன்!

"அரசியல் சட்டம் அப்படிப்பட்ட புனிதமானது என்பதை ஏற்கிறேன். அப்படியானுல் அதனைப் பல முறைகள் திருத்திய (குற்றத்திற்காக) தேசாயும், மற்ற காங்கிரசுக்காரர்களும், முன்பே பதவி விலகியிருக்க வேண்டும்.

"இருந்தாலும், தைரியமாக நேற்றையத்தினம் துணைத் தலைமையமைச்சர் அப்படிப் பேசியதை வரவேற்கிறேன்"

என்றுர் அமைச்சர் மாதவன்.

"நீதிமன்றங்களில் நிரந்தரமாக 'இனமொழி' அடிப்படை அதாவது வட்டார மொழியும் ஆங்கிலமும் இருக்கவேண்டும். தலைமைநீதிமன்றத்தில் ஆங்கிலம் மட்டுமே இருக்கவேண்டும்" என்று மாநாட்டில் கோரிக்கைவிட்டிருக்கிறுர் மாதவன்.

"இந்தி மொழி வெறியர்களின் எத்தகைய நேர்முக-மறைமுக சாகசங்களினுலும் எங்கள் மீது இந்தித் திணிப்பு நடத்துவது என்பது நடக்காத காரியம்; காலமும் சூழ்நிலையும் உங்களுக்குத் தோல்வியை உணரச் செய்யும்"

என்று, முன்தினம் மொரார்ஜி தேசாய் பேசிய 'பாஷை'யிலேயே சுடச்சுடப் பதிலளித்திருக்கிறுர் மாதவன்!

தமிழகத்தைப் பிரதிபலித்த அவரது மொழி உணர்வினைத் தவருகப் புரிந்துகொண்ட இந்தி மாநிலத்துச் சட்டத்துறை அமைச்சர்கள் சிலர், 'இந்தியை ஏற்கமாட்டோம் என்பது,

'நம் நாடு'
இதழில்
தமிழகம் சுற்றும்
தமிழர்கள்!
'திருவாளர் சந்தேகம்'
பகுதியில் தோன்றுகிறுர்கள்!
முதலாவதாக அறிமுகமாகிறவர்
'பாண்டி' யில்
பயணத்தைத் துவக்கும்

திங்கட்கிழமை இதழில்
பாருங்கள்!

இணைப்பு மொழியில் 'விஷப் பரீட்சை' வேண்டாம்--ஆங்கிலமே நீடிக்கட்டும்!

அன்று இராஜாஜி கூறியதை நினைவுபடுத்தி விருத்தாசலத்தில் அண்ணு எச்சரிக்கை

"'இந்தி, இந்தியாவைப் பிளவு படுத்தியது; ஆங்கிலம், இந்தியாவை ஒன்றுபடுத்தியது' என்று சிலஆண்டுகளுக்குமுன இராஜாஜி கூறியதை நினைவுபடுத்துகிறேன்; அதனை நானும் அறிகிறேன; இந்திய ஒற்றுமையில் நம்பிக்கையும் வைக்கிறேன்.

"ஆங்கிலமே இணைப்புமொழியாக நீடிக்கட்டும். இந்தப் பிரச்சினையில் புதிய சோதனை செய்வதற்கு இப்போது எந்த அவசியமும் எழுந்துவிடவில்லை!

—விருத்தாசலம் வழக்கறிஞர்கள் சங்க வரவேற்பில்: 1-9-67

நிஜலிங்கப்பா பற்றிய செய்தி நிஜமா?

"நேற்று புதுடில்லியில் துவங்கியிருக்கும் அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டியின் கூட்டத்தில், அவசரக் கோலத்தில் மதுவிலக்கை ரத்து செய்தார் என்பதற்காக மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா, மேலிடத்தால் 'கண்டிக்'கவோ, 'தண்டிக்'கவோ பட்டார் என்ற செய்தி உண்மையா?"

என்று கேட்ட பத்திரிகையாளர்களுக்கு, கட்சியின் செயலாளர் சாதிக் அலி, பதில் ஏதும் கூருமல் மௌனம் சாதித்திருக்கிறுர்!

காமராசரின் கையாலாகாத்தனம்

"நீண்டகால மவுனத்திற்குப் பிறகு அவர் (காமராசர்) விடுதலை விழாவில் பேச ஒப்புக்கொண்டார்; 'நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும்' என்று அவர் பேசினுர்.

"காங்கிரசுக்காரர்கள், 'முரசொலி' அலுவலகத்திற்கு வெளியே வைக்கப்பட்டிருந்த அண்ணுதுரை அவர்களின் உருவப் படத்தை நாசப்படுத்தியதாகவும், கழகக் கொடியைக் கிழித்ததாகவும், கற்களும் சோடா பாட்டில்களும் வீசப்பட்டதாகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூறுகின்றனர்.

"'முரசொலி'யின் நிறுவனர், அரசில் அமைச்சராக உள்ள கருணுநிதி என்பது குறிப்பிடத்தக்கது.

"நாட்டில், 'ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும்' என்று விரும்புகிற காமராசராலு, தமது மாநிலத்திலேயே ஒற்றுமையை எற்படுத்த முடியாமற் போயிருக்கிறது!"

—'தினமான்' இந்தி வார ஏடு (27—8—67)

'நம் நாடு'
இதழில்
மேலும் ஒரு புதிய பகுதி
★
'அரசியலுக்கு அப்பால்'
செய்தித் தோகுப்பு;
கருத்துக் கதிர்!
★
முதல் கட்டுரை:
பிள்ளையோ பிள்ளை!
அடுத்து:
....ப் பார்!...ப் பார்!

ஆணும் பெண்ணும் சேர்ந்து, 'பிள்ளை பிறந்தது யாரால்?' என்று சண்டை போட்டுக் கொண்டதைப்போலிருக்கிறது, மொரார்ஜி தேசாயின் வாதம்!

'இந்தியாவை விட எந்த மாநிலமும் பெரிதல்ல' என்கிறுர்!

'ஐயா! மாநிலங்கள் இல்லாமலா இந்தியா வந்துவிட்டது?' என்று கேட்டால், என்ன சொல்லுவாரோ தெரியவில்லை!

'இந்தியாவைவிட எந்த மாநிலமும் பெரிதல்ல' என்று வாதம் எழுப்புவதே, 'இந்தியா வேறு—மாநிலம் வேறு' என்ற சந்தேகத்துக்கு விதை போடுகிறதே?

இந்தத் துணைத் தலைமையமைச்சரே பம்பாயில் அமைச்சராக இருந்தபோது இப்படி நினைத்திருப்பாரா? பேசியிருப்பாரா?- தேசாயைப்போய் கேட்க வேண்டாம்-உங்களைத் தான் கேட்கிறேன்!

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 17 (2—9—67) சனி

இந்திய அரசின் கடமை

“இனம், மதம், மொழி, கொள்கை எதுவாக இருந்திட்டாலும், அதுபற்றி வேற்றுமை பாராட்டப்படமாட்டாது; அவர்கள் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வாழ உரிமை உண்டு” என்று அரசியல் சட்டம் கூறுகிறது.

“அனைவரும் இந்தியர்; இந்தியாவில் எங்கும் நடமாடலாம்; எந்த இடத்திலும் குடியிருக்கலாம்; நியாயமான தொழிலைச் செய்து வரலாம்” என்றும் அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

‘அனைவரும் இந்தியர்’ என்ற ஒருமைப்பாட்டு உணர்வைப் பற்றி நாள் தவறாமல் பேசப்பட்டு வருகிறது. அப்பேச்சைப் பேசாத தலைவர்களே கிடையாது.

அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கின்ற உரிமைப்படி, பம்பாய் நகரத்தில் குடியேறிப் பல ஆண்டுக்காலமாக அங்கேயே வாழ்ந்து வருகின்ற தென்னக மக்களுக்கு, இனியும் அங்கு தொடர்ந்து வாழ்ந்துவர முடியாத நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

“பம்பாயில் குடியேறி வாழ்ந்துவருகின்ற தென்னக மக்களால் எங்களுக்கு வாழ வழியில்லாமல் போய்விட்டது; எங்களுக்கு வாழ வகை கிடைத்திட வேண்டுமானால், இங்கிருந்து தென்னக மக்களை வெளியேற்றிவிடத்தான் வேண்டும்” என்ற தவறான எண்ணத்துக்கு, அம்மாநிலத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் அடிமையாகிவிட்டிருக்கின்றனர்!

அந்த நச்சு எண்ணத்துக்கு அடிமையாகிவிட்டதன் விளைவாக, பம்பாய் நகரத்திலிருக்கின்ற தென்னக மக்களை, அவர்கள், தாக்கத் தொடங்கியுள்ளனர். இத்தாக்குதலை அவர்கள், சென்ற சில மாதங்களாகவே செய்துவருகின்றனர்.

இந்த வெறியர்களின் கொடுமை, நாளுக்கு நாள் கூடிக்கொண்டு வருகிறது. இக்கொடியவர்களின் கொடுஞ்செயலை அடக்கி ஒழிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும், அம்மாநிலத்திலிருக்கக்கூடிய காங்கிரசு ஆட்சிக்கு இருக்கிறது.

ஆனால் அந்தக் காங்கிரசு ஆட்சியோ—தென்னக மக்களுக்கு எதிராக வெறிச் செயல்களைப் புரிந்துகொண்டு வருகின்ற குணக்கேடர்களைக்கொண்ட சிவசேனையைத் தலையில் தட்டி மூலையில் உட்காரவைப்பதற்குப் பதிலாக, தம் விருப்பம்போல் செயல்பட அதனை அனுமதித்துவிட்டது. அனுமதித்துவிட்டதுடன், மறைமுகமாக அந்தச் சேனையின் வன்முறைச் செயல்களுக்குத் தூண்டுதலும் செய்துவந்தது.

சிவசேனையின் அட்டூழியங்களுக்குப் பலியான தென்னக மக்கள், குரலெழுப்பலாயினர்; ‘நீதி கிடைக்காதா?’ எனக் குமுறலாயினர்; ‘இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஊறு தேடிக்கொண்டிருக்கின்ற சிவசேனை உலுத்தர்களைத் தட்டிக்கேட்க, தக்க அரசு இல்லையா?’ என்ற கேள்வியை—பாதிக்கப்பட்ட தென்னக மக்கள் சார்பில்—அரசியல் தலைவர்கள் எழுப்பலாயினர்.

சிவசேனையின் பிரதேச வெறியையும், தீய செயல்களையும், இந்தியத் தலைமை அமைச்சர் கண்டிக்கத் துணிந்தார். இந்திய உள்நாட்டு அமைச்சர், சிவசேனையின் போக்கை மட்டந்தட்டப் போவதாக அறிவித்தார்.

சிவசேனையின் வன்முறைச் செயல்களால், பம்பாய் நகரில் இருக்கின்ற தென்னக மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற துன்பத்தின் தன்மையையும், இழப்பின் அளவையும் நேரில் அறிந்தவர நாடாளுமன்ற உறுப்பினர்களான கிருஷ்ணமூர்த்தியும், உமாநாத்தும்—முறையே முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், இடதுசாரிப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும் பம்பாய் நகரத்துக்குச் சென்றனர்.

காரில் சென்ற அந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும், ‘காரிலிருந்து வெளியில் இழுத்துத் தங்கள் கைவரிசையைக் காட்டி இருக்கின்றனர்—சிவசேனையைச் சேர்ந்த குண்டர்கள்’ என்ற செய்தி ஏற்கனவே தரப்பட்டிருக்கிறது. நிலைமையை அறியச் சென்றவர்களே சிவசேனையின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளனர் என்றால், அங்கேயே நிலையாக வாழ்ந்துவருகின்ற தென்னக மக்களுக்கு, அந்தச் சேனை கொடுத்திருக்கின்ற தொல்லை கொஞ்சமாகவா இருந்திடும்?

சிவசேனையின் கோரத் திருவிளையாடலையும், அத்திருவிளையாடலுக்கு இலக்காகி அங்குள்ள தென்னக மக்கள் பட்டுவரும் அல்லலையும் நேரில் கண்டறிந்து திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் தங்களை அங்கு அனுப்பிவைத்த கட்சித் தலைமைக்குத் தகவலைத் தெரிவித்திருப்பதுடன், செய்தியாளர்களிடம்—சிவசேனையால் தென்னக மக்கள் இதுவரை அடைந்துள்ள இழப்பையும், கொண்டுள்ள அச்சத்தையும் சுருக்கமாகக் கூறியிருக்கின்றனர்:—

> “பம்பாயில் தென்னிந்தியர்கள்மீது சிவசேனையின் துவேஷப் பிரசாரமும் தாக்குதல்களும், கட்டுப்பாடின்றித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ‘உத்தியோக வட்டாரங்களில்கூட அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக, பம்பாயில் பல இடங்களில் தென்னிந்தியர்களுக்குப் பாதுகாப்பில்லாமற்போய்விட்டது. எந்தச் சமயத்திலும் தங்களுக்கு அடி விழும் அல்லது கத்திக்குத்து ஏற்படலாம் என்ற பயம் தென்னிந்தியர்களைப் பிடித்து ஆட்டுகிறது.”

பம்பாயில் வாழ்ந்துவருகின்ற தென்னக மக்கள், எத்தகைய அச்சத்துடன் இன்று அங்கு வாழ்ந்து வருகின்றனர் என்பதை, மேலே குறித்திருக்கின்றதைக்கொண்டு அனைவரும் உணர்ந்து கொள்ளலாம்.

‘எந்த நேரத்தில் என்ன நேரக்கூடுமோ’ என்ற அச்சத்தில் மூழ்கிக்கிடக்கின்றனர்—பம்பாயிலிருக்கின்ற தென்னக மக்கள்.

உடைமை சூறையாடப்படுமோ—உயிர் பறிக்கப்பட்டுவிடுமோ—கைகால்கள் துண்டிக்கப்பட்டு விடுமோ—என்ற அச்சத்துடனேயே, பம்பாயில் தென்னக மக்கள் இன்று காலங்கழித்து வருகின்றனர் என்பது, நிலைமையை நேரில் கண்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்திருப்பதிலிருந்து தெளிவாகிறது.

சிவசேனையின் கொடுஞ்செயல்கள் குறித்தும், அக்கொடுஞ்செயல்களுக்கு ஆளாகி பம்பாய் நகரத்தில் தென்னக மக்கள் பட்டு வருகின்ற அவதி குறித்தும், மாராட்டிர முதலமைச்சர் எத்தகைய போக்கினைக் கொண்டிருக்கின்றார் என்பதையும் மேற்குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றனர்; அது, இது:—

> “நாங்கள் எவ்வாறு அறிக்கை சமர்ப்பித்தாலும், ‘பம்பாயில்தானே நடவடிக்கை எடுக்கவேண்டும்’ என்று மாராட்டிர முதலமைச்சர் எங்களிடம் கூறினர். இதிலிருந்து என்ன தெரிகிறது? சிவசேனைக்கும் மாராட்டிர அரசாங்கத்துக்கும் ‘இரகசியப் பிணைப்பு’ இருப்பதாகத் தெரிகிறதல்லவா?”

பம்பாய் முதலமைச்சரைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டிருக்கின்ற கருத்தை, இந்தியத் தலைமை அமைச்சரும், உள்நாட்டு அமைச்சரும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சிவசேனையின் கொடிய கரங்களில் சிக்கி, துன்பத்துக்கும் துயரத்துக்கும் உள்ளாகி இருக்கக்கூடிய பம்பாய்வாழ் தென்னக மக்களுக்குப் பாதுகாப்பு அளித்திட வேண்டிய முழுப்பொறுப்பையும், இந்திய அரசாங்கமே இனி ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

—கா. க.

சின்ன விஷயம்

வெறுப்பில் விளைந்த கடிதம்!

குரங்கு கள்ளும் குடித்து—பேயும் பிடித்து—தேளும் கொட்டினால் என்ன ஆகும்? ஒன்றும் ஆகிவிடாது!

‘யார் விதைத்த வித்து எங்கே முளைத்தது’ என்று சில குடிமக்களைப்போல் அபத்த ஆராய்ச்சியில் ஈடுபடும்!

ஏச்சில் வல்ல அந்தக் குடிமக்கள், ‘நாம் என்ன செய்கிறோம்—என்ன எழுதுகிறோம்’ என்று புரியாமலே மயக்கத்தில் எதையாவது செய்து கொண்டிருப்பார்கள்!

தாங்கள் எழுதும் வாக்கியம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பத்தியாக அமைந்துவிட்டால், அதுவே தத்துவம் ஆகிவிடும் என்று அவர்களுக்கு ஓர் அற்ப நினைப்பு!

தமிழ் நாட்டு அரசியலைப் பிடித்த பீடை—இப்படிச் சில பேர் இருக்கிறார்கள்!

தமிழைத் தவிர இன்னொரு மொழியும் சிறப்புடையதுதான் என்று சொன்னதற்காகவே ‘உன்னைச் சுமந்தவளும் தமிழ்ப் பெண்ணா?’ என்று கேட்டு, ‘சுற்றம் தலைகுனிய வேறென்ன வார்த்தை வேண்டும்?’ என்று முழக்கிய மேதாவிகள்தான், முட்டாள்தனமாக, இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உலகத்தின் பல பாகங்களிலுமாகத் தொண்ணூற்றாறு இலட்சம் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருப்பதாக நமக்கு நினைவுபடுத்துகிறார்கள்!

பர்மாத் தமிழர்கள் வந்தபோது 200 ரூபாய் கொடுத்துத் தங்கிட வைத்ததோடு தம் கடமை முடிந்தது என்று நினைத்துக் கிடந்த அரசு அல்ல இன்றிருப்பது! ஈழத் தமிழர் ஈங்கு வருமுன், அவர்களைக் குடியமர்த்திடத் திட்டம் தீட்டும் நல்லரசு இன்றிருக்கிறது!

நமக்கு இவர் நினைவுபடுத்துகிறாராம்!

மராட்டியத்தில் வெறியாட்டம் போடும் சிவசேனையைக் கண்டிக்க வேண்டுமானால், அந்த வேலையை முறையாகச் செய்யலாம்; அதன் வளர்ச்சிக்கான காரண காரியங்களை ஆராயலாம்; அதை விடுத்து—‘வௌவாலுக்கு நீளவும் தெரியும்; குறுகவும் தெரியும்’—என்கிற மாதிரி, எங்கோ நுழைந்து என்னவோ தேடிப் பிடிக்கிறார் இந்தப் பெருமான்!

வகுப்பு வாதம்—இன வாதம்—மொழி வெறி இவற்றின் மூலந்தான் கழகம் வளர்ந்ததாம்!

‘வகுப்புப் பேதம் இருக்கிற இடத்தில் வகுப்பு வாதம் எப்படி இல்லாமல் போகும்’ என்பது, இந்தப் புத்திசாலியின் மூளையில் ஏனோ உதயமாகவில்லை!

‘வடநாட்டு ஏகாதிபத்தியம் தமிழ்நாட்டை ஆளுகிறது’ என்றும், ‘தமிழர்களை மார்வாடிகள் சுரண்டுகிறார்கள்’ என்றும் கழகம் சொன்னதை, சிவசேனைக் கலவரங்களோடு முடிபோடுகிறார் இவர்!

நேற்று வெளியிட்ட ஒரு செய்திக்கு இன்று வருந்துகிற இதழில் பொழுதுபோக்காக எழுதுகிறவர்கள், ‘தமிழகத்தில் அத்தகைய எண்ணப் புரட்சிக்கு வித்திட்டவர்கள், வன்முறைக்கு வழிகோலவும் இல்லை—வளர்த்திடவும் இல்லை’ என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து, ‘தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கில்தான் வடநாட்டார் வாழுகிறார்கள். வடநாட்டில் லட்சோப லட்சம் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்’ என்று வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள்!

எந்தத் தமிழனும், வடநாட்டில் சுரண்டிக்கொண்டில்லை! மாதக் கூலி வாங்கிக்கொண்டு நாணயமாக வேலை செய்துகொண்டிருக்கிறான்!

எந்தத் தமிழனும் வடநாட்டில் முதல் போட்டு ஆலை நடத்தவில்லை; மாறாகக் கூலிக்கு மாடாக உழைத்துக் கொண்டுதான் இருக்கிறான்!

வெறுப்பு—காழ்ப்பு—பிடிவாதத்தின் அடிப்படையில் மட்டுமே சிந்தனையை ஓட்டத் தெரிந்த மொரார்ஜியின் பாணியில் இவர், எதோடோ எதையோ முடிபோடப் பரிதாபமாக முயலுகிறார்!

‘ஏண்டா; முடிச்சவிழ்க்கிறாய்?’ என்று பகற்கள்ளனைப் பார்த்துக் கேட்டால், ‘என் பசி உனக்கென்ன தெரியும்?’ என்றானாம்; அந்த மாதிரி இருக்கிறது—இவர்கள் கட்சி வளர்க்கும் இலட்சணமும், அதற்காக வாதம் செய்யும் அழகும்!

தமிழன் செக்கில் அரைபடும் எள்ளைப்போல், வடநாட்டில் நசுங்கிக்கொண்டிருக்கிறான்!

மராட்டிய மண்ணில் மட்டுமல்ல—டில்லிப் பட்டணத்தில் ‘கபர்ஸ்தான்’—மயானப் பகுதிகளிலும் வாழும் தமிழர், உழைத்துச் சாப்பிடுகிறார்கள்! உழைத்து உண்பது தமிழன் பண்பு!

துவேஷத்தைக் கிண்டிவைத்து—கிளறிவைத்து—கொள்ளிக்கட்டையைக் கையில் கொடுத்துத் தூண்டிவிடும் பேர்வழிகள், இப்படி ஊருக்கு உபதேசம் செய்யும் உத்தமர்களாய் மாறிடும் விசித்திரத்தைக் காண வேதனையாய் இருக்கிறது!

வெறுப்பில் விளைந்த கடிதம் அது! அவ்வளவுதான்!

—பூரணன்

சேலம் உருக்காலை—டில்லியின் நிலை?

புதுடில்லி, அக். 31—

மதுரையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும்—முதலமைச்சர் அண்ணாவும் சந்தித்துப் பேசியதிலிருந்து, சேலம் உருக்காலைத் திட்டம் குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் என்று தென்னக அரசியல் வட்டாரத்தில் கருதப் படுகிறது.

ஆனால், சேலம் எஃகு இரும்பாலைத் திட்டம் குறித்து முடிவெடுப்பதில் திட்டக் குழுவும், நிதி அமைச்சுத் துறையும் மிகவும் சிரமப்படுகின்றன. ஊதிய முடக்கத் திட்டம், மற்றும் பல முக்கியத் திட்டங்களை மேற்கொள்ள நிதியமைச்சர் மொரார்ஜி முடிவு செய்திருப்பதால், சேலம் இரும்பு ஆலைத் திட்டம் போன்ற திட்டங்கள் குறித்து முடிவெடுப்பது தள்ளி வைக்கப்படுமெனத் தெரிகிறது.

பொருளாதாரம்: ஏட்டிலும் நாட்டிலும்!

அண்ணா தரும் விளக்கம்

“‘உற்பத்தி’ Production) என்பது, பொருளாதாரத்தின் ஓர் அங்கம்!

‘தேவையைப் பூர்த்தி’ செய்வது (உட்கொள்ளுதல்—Consumption) என்பது, உற்பத்திக்குப் பின்னர் நடப்பது!

பொருளாதாரத்தின் ஆரம்பப் பாடம் முதலில் ‘உற்பத்தி’யைப் பற்றியும், அடுத்து, ‘உட்கொள்ளுதலை’ப் பற்றியும் தான் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும்!

ஆனால் அது, ஏட்டுப் படிப்பு தான்!

பாடப் புத்தகத்தின் அமைப்பில் வேண்டுமானால் ‘உற்பத்தி’க்குப் பின்னர் ‘உட்கொள்ளுதல்’ என்று இருக்கலாம்.

ஆனால் ‘உற்பத்தி’க்கு முன்னரே, சரியான ‘தேவை’ ‘உட்கொள்ளப்படும் என்ற நிலை நாட்டில் இருக்கவேண்டும்’ என்பதுதான்!

இந்த அளவில்—நடைமுறைப்படி—முதலில் உட்கொள்ளுதல் வருகிறது; பின்னர்தான் உற்பத்தி வருகிறது.”

—தென்னிந்திய வணிகக் கழக ஆண்டு விழாவில்

ஆட்சியைக் கவிழ்க்கக் காங்கிரசு சதி

பீகாரில் பதவியைப் பெற முயற்சி

ஆள் இழுப்பு முயற்சியில் மத்திய அமைச்சர் மூலம் வலை வீச்சு

புதுடில்லி, ஆக. 31—

"பீகார் மாநிலத்தில் ஐக்கிய முன்னணி அமைச்சரவையைக் கவிழ்ப்பதில் காங்கிரசு 'சதி' செய்துவந்திருக்கிறது" எனத் தற்போது தகவல் கிடைத்திருக்கிறது.

கடந்த சிறிது காலமாகவே பீகார் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவரக் காங்கிரசு மேலிடம் தக்க வாய்ப்பினை எதிர்பார்த்துக்கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

'பீகாரில் காங்கிரசுக் கட்சி கூட்டு அமைச்சரவை அமைப்பதோ, புதிய கட்சியை ஆதரிப்பதோ தற்போதைக்கு நடக்காத காரியம்' என்று சொல்லப்படுகிறது.

பீகார் சட்டமன்றத்தில் எம். பி. சின்காவின் ஐக்கிய முன்னணியின் பெரும்பான்மையைக் குறைப்பதற்காக ஐக்கிய முன்னணியிடமிருந்து மண்டலையும், அவரது ஆதரவாளர்களையும் வெளியேறிவரக் காங்கிரசு ஆசை காட்டியிருக்கிறது.

"இதன்மூலம் முதலமைச்சர், சட்டமன்றத்தைக் கலைக்கும்படி கவர்னருக்கு யோசனை கூறிவிட்டு புதிதாகத் தேர்தல் நடத்தும்படி—யோசனை கூறுவார்" என்று காங்கிரசு எதிர்பார்க்கிறது.

"சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்தும்படி கவர்னரிடம் யோசனை சொல்ல முதலமைச்சருக்கு உரிமை உண்டு" என்று உள்துறை அமைச்சர் சவான் ஏற்கனவே கூறியிருக்கிறார். முதலமைச்சர் மகாமாயா பிரசாத் சின்கா விரும்பினால், இது மிகவும் எளிதாக முடியும்.

"தற்போதைய சட்டமன்றத்தைக் கலைக்காமல் புதிதாகத் தேர்தல் நடத்த முதலமைச்சர் யோசனை சொல்லலாமா?" என்ற பிரச்சினையும் எழுந்துள்ளது. சட்டமன்றம் கூடாதிருக்கும்வகையில், தற்போதைய ஐக்கிய முன்னணி அமைச்சரவை தோல்வியடைந்ததாகச் சொல்ல இயலாது. காங்கிரசு சதியை முறியடிக்கும் வகையில், இடைத் தேர்தல் நடத்துவதற்கு முன்பு, தற்போதைய அமைச்சரவையே 'காபந்து அரசு' ஆக இயங்கக்கூடும்.

ஆனால் காங்கிரசு மேலிடம் இதற்கும் ஒரு திட்டம் வைத்திருக்கிறது; ஐக்கிய முன்னணியிலிருந்து தனது ஆதரவாளர்களுடன் ராம்கார் ராஜாவை வெளியேறச் செய்ய அவரது உறவினரான மத்திய வணிக அமைச்சர் ராஜா தினேஷ் சிங் மூலம் காங்கிரசு மேலிடம் நிர்ப்பந்தம் தருகிறது!

டில்லியிலும் காங்கிரசு கவிழும்

"நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தால், காங்கிரசைக் கவிழ்த்துவிட்டு, மத்தியில் கூட்டு அமைச்சரவை அமைப்பது நடைபெறக்கூடியதே"

என்று சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் ஜோஷி கூறினார்.

மத்தியில் எதிர்க் கட்சிகள் ஒன்று சேருவதற்குக் குறுக்கீடாக இருப்பது சில கருத்து வேறுபாடுகளே!

எதிர்க் கட்சிகளிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இம்முயற்சி வெற்றி பெறுவதற்குச் சிறிது காலம் பிடிக்கும்.

மத்தியில் கூட்டு அமைச்சரவை அமைக்கப்படுமானால், கருத்து வேறுபாடுகள் இருக்கக்கூடும்; ஏதேனும் ஒரு விவகாரம் குறித்துக் கூட்டு அமைச்சரவை கட்சிகளிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாம்; ஆனால், ஒன்றுபட்ட நடவடிக்கைக்கு இவர்கள் ஒரு வழி காணவேண்டும்."

கல்கத்தாவில் பாரதிதாசன் விழா

வங்கத் தமிழர் சங்கத்தின் சிறப்பான ஏற்பாடு

கல்கத்தா—அவுராவில் இயங்கும் வங்கத் தமிழர் சங்கச் சார்பில் 20—8—67 அன்று பாவேந்தர் பாரதிதாசனார் விழாவும்—சங்க இலவசத் தொடக்கப் பள்ளியின் மூன்றாம் ஆண்டுவிழாவும்—மலர் வெளியீட்டு விழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, தலைமையமைச்சர் இந்திரா காந்தி, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா, சட்டமன்றத் தலைவர் சி. பா. ஆதித்தனார், வங்கச் சட்டமன்றத் தலைவர் திரு. விஜயகுமார் பானர்ஜி, தமிழகக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், வங்கக் கல்வியமைச்சர் ஜோதி பட்டாச்சாரியா, தமிழகப் பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி, அரிசன நல—செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து, சட்டம்—கூட்டுறவுத் துறை அமைச்சர் செ. மாதவன், உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி, செ. கந்தப்பன் எம்.ஏ., எம்.பி., கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் சி. இலக்குவனார், கி.வா.ஜகந்நாதன், மற்றும் ஏராளமானவர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

சங்கத் தலைவர் ஜி. இராகவனார் அனைவரையும் வரவேற்று உரையாற்ற—விழாத் தலைவர் ஏ. ஏ. சேக் பரீது பி. எஸ்சி., பி. காம். தலைமையுரையாற்ற—'மலரை' டி. என். தங்கதுரை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

"சங்கம் ஆரம்பித்து 3 ஆண்டுகளுக்குள் மலர் வெளியிடுவதும், முதல் மலரிலேயே ரூ. 6,000 வருமானமுள்ளதாக வெளியிடுவதும், மலரில் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படம் முழுப் பக்கத்தில் மிகச் சிறப்பாக இடம் பெற்றிருப்பதும், பிற மொழி பேசுபவர்கள் அறிந்துகொள்ளும்படி திருவள்ளுவர்—பாரதிதாசனார் பற்றிய ஆங்கிலக் கட்டுரைகள் இடம் பெற்றிருப்பதும் சிறப்புமிக்கதாகும்."

மலரின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்ட திரு. ஆர். சின்னசாமி (தலைவர், தென்னிந்தியக் கைத்தறித் துணிக் கழகம், கல்கத்தா) 'மலர், அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்றுவிட்டது' எனப் புகழ்ந்துரைத்தார்.

மாண்புமிகு ஆதித்தனார் தலைமையில், பொருளாளராக முரசொலி மாறன் அவர்களைக் கொண்டுஆரம்பிக்கப்பட்ட 'பாரதிதாசன் நினைவுக் குழு'விற்கு சங்கம் ரூ. 51 நன்கொடை அளிக்க உள்ளது என்ற அறிவிப்பு, உற்சாகமாக விழாவில் வரவேற்கப்பட்டது.

சங்கக் காவலர் எஸ். நாகசாமி சங்கத்தின் சார்பாக இலவசமாக அளிக்கும் சீருடைகள், புத்தகங்கள், நோட்டுகள், சிலேட்டு, எழுதுபொருள்கள் முதலியவைகளை பள்ளிப் பிள்ளைகளுக்கு வழங்கினார்.

சங்கத் தலைவர் ஜி. இராகவனார், விருதுநகர் வெ. வெ. இராமசாமி அவர்களின் பேரர் ஜே. நீதிவாணன் எம்.ஏ. அவர்கட்கு வங்கத் தமிழர் சங்கத்தின் சார்பாக நாவலர் நீதிவாணன் என்ற சிறப்புப் பட்டத்தைச் சூட்டினார். நண்பர்கள் பலர், நாவலர் நீதிவாணன் அவர்கட்குக் கைத்தறி ஆடைகள் அணிவித்தார்கள்.

இலவசமாகத் தமிழ்க் கல்வி அளிப்பதோடு, சீருடைகள்—புத்தகங்கள்—நோட்டுகள் — சிலேட்டு—வாய்ப்பாடு—மற்றும் எழுதுபொருள்கள் முதலியனவும் இலவசமாக் அளித்து ஏழைக் குழந்தைகளைப் படிக்க வைக்க சங்கம் ஆற்றும் பணி குறித்துப் பாராட்டியும், பாவேந்தரின் பாடல்களின் சிறப்புப் பற்றியும் திருவாளர்கள் கே. சேக் அப்துல் காதர், மலேயா கிருஷ்ணன் எம்.ஏ., தேவராசர், எஸ். அண்ணாமலை, ஏ.எஸ். சேகனாதன், வி. எஸ். இராமானுசம், நாவலர் நீதிவாணன் எம்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

'இசைத் தென்றல்' முத்து, பாரதிதாசனாரின் பாடல்களைப் பண்ணோடு பாட—பள்ளிச் செல்வியரின் நடனக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. குறிப்பாக மூன்று வயது அம்பிகா இசைக்கேற்ப ஆடும்பொழுது, மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தனர்.

சங்கச் செயலாளர் திரு. மு. இராமையா நன்றி நவில—நாட்டு வாழ்த்து திரு. இராதாகிருஷ்ணன் பாட விழா இனிது முடிந்தது.

திருத்தம்

'நம் நாடு' (சென்னை 19—8—67; வெளியூர்: 20—8—67) இதழ் நான்காவது பக்கத்தில் வெளியாகியுள்ள அரசாங்கக் கடன்கள் பற்றிய விளம்பரத்தில், '5¾ சதவிகித மாநில அரசாங்கக் கடன்கள்—1967' என்றிருப்பதற்குப் பதில்,

'5¾ சதவிகித மாநில அரசாங்கக் கடன்கள் –1979'

என்றிருக்க வேண்டும். திருத்திப் படிக்க வேண்டுகிறோம். (ஆ-ர்)

சென்னை முதல் வட்டம் நாவலர் நெடுஞ்செழியன் குடிசை வாழ்வோர் மன்றம்

20—8—67-ல் மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்தல், வட்டச் செயலாளர் து. கோவிந்தசாமி அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : ஜி. முனியப்பன்; செயலாளர்: தி. பத்மநாபன்; துணைச் செயலாளர் : கே. சுப்பிரமணி; பொருளாளர் பி. துரை; செயற்குழு உறுப்பினர்கள் : ஆர். செல்வரங்கம், என். கபாலி, என். ஜெயராமன், எம். முத்துகிருட்டினன், கே. ஜெயராமன், ஆர். பார்த்தசாரதி, ஐ. நாகப்பன், சி. அண்ணாமலை, கே. ஆறுமுகம்.

சென்னை 90-வது வட்ட பொதுநலக் குடிசை வாழ்வோர் சங்கம்

16—8—67 அன்று அடையாறு 90-வது வட்ட அரங்கண்ணல் சாலை பொதுநலக் குடிசைவாழ்வோர் சங்க நிர்வாகிகள் தேர்தல், வட்டச் செயலாளர் அ. து சங்கரன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; அதுபோது, தலைவராக கே. ரங்கநாதன்; செயலாளராக த. ஆறுமுகம்; பொருளாளராக டி. வேங்கடபதி; 15-பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குடந்தை நகர எம்.ஜி.ஆர். பொதுநல மன்றம்

குடந்தை நகர தி.மு.க. பணிமனையில் 20—8—67-ல், திரு. ப. கோதண்டபாணி எம்.சி. முன்னிலையில் மேற்படி மன்றத் தேர்தல் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : எஸ். கன்னையன்; துணைத் தலைவர் : த. கன்னையன்; செயலாளர் : கோ. சீராமுலு; துணைச் செயலாளர் : வ. தாமோதரன்; பொருளாளர்: டி. கே. ரவீந்திரன்; மற்றும 6 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பெங்களூரில் கருணாநிதி மன்றத் திறப்பு விழா

பெங்களூர் 12-வது வட்டம் நாசேந்திரா கார்டனில், 20-8-67 மாலை 6-மணிக்கு கலைஞர் கருணாநிதிமன்றத்தை முன்னாள் போலீசு ஊழியர் வெ. கண்ணன் திறந்து வைத்தார்.

திரு. கருணாநிதி அவர்களின் உருவப்படத்தை, 'முரசொலி' துணை ஆசிரியர் அடியார் திறந்து வைத்தார்.

கழகத் கொடியை, மாநில அமைப்பாளர் தி. திராவிடமணி ஏற்றிவைத்தார்.

மாலை 7-மணிக்கு பொதுக் கூட்டம் 12-வது வட்ட செயலாளர் வி. எஸ். கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

தோழர் அடியார் பேசுகையில் சென்னையில் 'முரசொலி' அலுவலகத்தில் காங்கிரசுக் காலிகள் நடத்திய செயலை கண்டித்தார்.

தோழர் வெ. கண்ணன், தமிழக அரசு செய்துவரும் சாதனைகளை விளக்கிப் பேசினார்.

தாராபுரம் கூட்டுறவு ஆலை தி. ப. தொ. மு. சங்கம்

தாராபுரம் கூட்டுறவு ஆலை திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணைக் குழு நிர்வாகிகள் வருமாறு :—

தலைவர் : பி. வேல்சாமி; செயலாளர்: வி. கதிர்வேல்: துணைச் செயலாளர் : டி. சின்னதம்பி; பொறுப்பாளர் : கே. சி. கிருஷ்ணசாமி; மாவட்டப் பிரதிநிதிகள் : முத்துமாணிக்கம், ஆர். பழனிச்சாமி, கே. ஆர். காளியப்பன், சி. டி. குப்புசாமி, சாமிக்கண்ணு, சோமு.

கூட்டுறவுப் பண்டகசாலைத் தேர்தல்

24—7—67 அன்று கோவை சூரியபிரபா ஆலை கூட்டுறவுப் பண்டகசாலைத் தேர்தலில், ஐ.என்.டி.யு.சி., எச்.எம்.எஸ்., தி.ப.தொ.மு. சங்கம் ஆகியவை சார்பில் போட்டியிடப்பட்டது; அதில் ஓட்டுகள் பெற்றுத் தி.ப.தொ.மு. சங்கச் சார்பில் கருப்புசாமி வெற்றிபெற்றார்.

தமிழக அரசின் வேண்டுகோள் ஏற்கப்படும்

சுழல் அச்சுப் பொறி தருவிக்க யுனெஸ்கோ நிறுவனம் ஆதரவு

சென்னை, ஆக. 30—

பாட நூல் அச்சிடுவதற்கான 'ஆப் செட்' சுழல் அச்சுப் பொறி உதவ வேண்டும்—என்னும் தமிழக அரசின் கோரிக்கைக்கு, சென்னையில் உள்ள 'யுனெஸ்கோ' தேசியக் கமிஷன் ஆதரவு தெரிவித்துள்ளது.

"குறைந்தது இந்த அச்சுப் பொறியைத் தருவிப்பதற்கான அயல்நாட்டுச் செலாவணியையாவது கொடுத்துதவுவோம்" என அது கருத்தறிவித்துள்ளது.

பள்ளிப் பாட நூல்களை அச்சிட்டு வழங்கும் பணியைத் தமிழக அரசே மேற்கொண்டிருப்பதை யொட்டி, அந்தப் பணி செவ்வனே நடைபெறுவதற்கு உதவும் வகையில், ஆப் - செட் சுழல் அச்சுப் பொறியொன்றையும், தேவையான காகிதத்தையும் அளிக்குமாறு 'யுனெஸ்கோ'விடம் தமிழக அரசு கேட்டுக்கொண்டது.

இதுபற்றி, தமிழகக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்ததாவது :—

"பாட நூல்களை அரசே அச்சிட்டு வழங்கும் திட்டத்தின்படி தற்போது 75 இலட்சம் நூல்கள் அச்சிடப்படுகின்றன; விரைவில், இந்த எண்ணிக்கை 100 இலட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆப்செட் சுழல் அச்சுப் பொறி மிகவும் இன்றியமையாததாகிறது.

சுழல் அச்சுப் பொறியில் அச்சிடுவதற்கான காகிதம் உள்நாட்டில் தயாரிக்கப்படவில்லை; எனவே காகிதமும் வெளிநாட்டிலிருந்து தருவித்தாக வேண்டியுள்ளது.

தமிழில் முதல் ஏழு வகுப்புகளுக்கான பாட நூல்களையும், ஆங்கிலத்தில் நான்காம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்புவரையிலான பாட நூல்களையும் அரசே அச்சிட்டு வழங்குகிறது."

பொய்ச் செய்திக்கு மறுப்பு

காரைக்குடி

"22—8—67 தேதியிட்ட 'நவசக்தி' என்னும் இதழில், காரைக்குடி நகர் தி. மு. க. கிளை பற்றிப் பொய்யான ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் செயலாளர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயற்சிக்கப்பட்டு; பின் தள்ளிவைக்கப்பட்டதாக அச்செய்தி கூறுகிறது!

இதுவரை நடந்த செயற்குழுக் கூட்டங்கள் எதிலுமே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்பதோடு, கொண்டுவரவேண்டும் என்ற பேச்சே பேசப்படவில்லை என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதாரமற்ற பொய்ச் செய்தியைப் பொதுமக்களும், தோழர்களும் நம்பவேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்" என்று நகரச் செயலாளர் சித. சிதம்பரம் அறிவிக்கிறார்.

குணியமுத்தூர்

"குணியமுத்தூரில் நடந்த காங்கிரசுப் பொதுக்கூட்டத்தில் திண்டுக்கல் மணிபாரதி என்பவர் பேசும்போது, கூட்டத்தின் ஓரத்தில் தி. மு. கழகத்தினர் நின்றுகொண்டு குழப்பமும், கூச்சலும் செய்துகொண்டிருந்ததாகவும். சிறிது நேரத்தில் மேடையை நோக்கி 2 கற்கள் வீசப்பட்டன என்றும் காங்கிரசு நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

இளைஞர் காங்கிரசுக் கூட்டம் 15—9—67-ல் நடைபெற்றது உண்மை; இதில், திண்டுக்கல் மணிபாரதி என்ற ஒரு நபர் பேசவரவே இல்லை; பேசியதாக வெளியான செய்தி முழுப் பொய். தி. மு. க.-வினர் எந்தவித அசம்பாவிதச் செயலுக்கும் ஆட்பட்டவர்கள் அல்லர் என்பதனை உறுதியாகக் கூறுகிறேன்.

குணியமுத்தூரில் குண்டர்களின் அட்டகாசம் என வெளியான செய்தி முழுக்க முழுக்க உண்மைக்கு மாறானதாகும்" என்று குணியமுத்தூர் தி. மு. க. செயலாளர் தங்கமாணிக்கம் தெரிவிக்கிறார்.

சென்னை

"சென்னை 3-வது வட்டம் புதுமனையில், காமராஜ் தேசிய சங்கத்தின் முக்கிய பொறுப்பு வகிக்கும் ஈ. எம். இஸ்மாயில் என்பவரை தி. மு. கழகத்தினர் வெறித்தனமாக தாக்கியதாக 'நவசக்தி'என்ற ஏட்டில் (22—8—67-ல்) வெளிவந்த செய்தி முற்றிலும் உண்மைக்கு மாறானதாகும்.

இஸ்மாயில் கூறிய செய்திக்கும் —தி. மு. கழகத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்" என, வட்டச் செயலாளர் க. சாரங்கபாணி அறிவிக்கிறார்.

மறைவு

காரைக்குடி நகர தி.மு.க. செயலாளர் சித. சிதம்பரம் அவர்களின் தந்தையார், 23—8—67-ல் இயற்கையெய்தினார் என்றசெய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

திருவள்ளூர் 12-வது வட்டம் பெரியகுப்பம் தி. மு. கழகக் கிளையின் நீண்ட நாள் உறுப்பினர் கே. திருமலை, 3—8—67-ல் இயற்கையெய்தியது குறித்து வட்டக் கிளையின் சார்பில் அன்னார் குடும்பத்துக்கு அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சென்னை சீரணியின் முதற்பணி

நாளை 12 தொகுதிகளிலும் துவக்கம்

அமைச்சர்கள்-அமைச்சர்களின் மனைவியர்-மேயர்-துணை மேயர்-சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு

சென்னை, செப். 2—

சென்னை மாவட்டச் சீரணியின் முதல் ஆக்கப் பணி நாளை காலை சென்னையில் துவங்குகிறது.

சென்னை மாநகரின் 12 தொகுதிகளிலும், துப்புரவுப் பணியை மேற்கொள்ளவிருக்கின்றனர், சீரணித் தொண்டர்கள்.

ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில், காலை 8 மணிக்கு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் துப்புரவுப் பணியைத் துவக்கிவைக்கின்றனர்.

சென்னையில் திரட்டப்பட்டுள்ள சுமார் இரண்டாயிரம் சீரணித் தொண்டர்களும் இப்பணியில் ஈடுபடுகின்றனர்.

வண்ணைத் தொகுதி

8-வது வட்டம் இராயபுரம் மாதா கோயில் அருகில் மாவட்டச் செயலாளர் நீலநாராயணனும், சட்டமன்ற உறுப்பினர் வேதாசலமும் துவக்கிவைக்கின்றனர்.

துறைமுகத் தொகுதி

14-வது வட்டம் போர்ட் லைன் பீச் அருகில் சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா துவக்கிவைக்கிறார்.

பேசின்பிரிட்ஜ் தொகுதி

22-வது வட்டம் அரங்கநாதபுரத்தில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. ஆகியோர் துவக்கிவைப்பர்.

பூங்காநகர் தொகுதி

63-வது வட்டம் பெரியமேடு சாமி பிள்ளை தெருவில், துணை மேயர் கிருஷ்ணமூர்த்தி, எச். வி. ஹண்டே எம்.எல்.ஏ. ஆகியோர் துவக்கிவைப்பர்.

பெரம்பூர் தொகுதி

33-வது வட்டம் புளியந்தோப்பு திரு. வி. க. நகரில் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து துவக்கிவைப்பார்.

புரசைத் தொகுதி

கொன்னூர் நெடுஞ்சாலை ஓட்டேரி பாலம் அருகில் திருமதி இராணி அண்ணா, திருமதி தயாளு கருணாநிதி, திருமதி இராஜ சுந்தரி மதியழகன், திருமதி பத்மாவதி கோவிந்தசாமி ஆகியோர் துவக்கிவைப்பர்.

எழும்பூர் தொகுதி

53-வது வட்டம் சேத்துப்பட்டு—மீனம்பாள் சிவராஜ் நகர் சமூகக் கூடம் அருகில் மேயர் இரா. சம்பந்தம் துவக்கிவைப்பார்.

ஆயிரம்விளக்கு

56-வது வட்டம் மாடல் பள்ளி அருகில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் துவக்கிவைப்பார்.

திருவல்லிக்கேணி

வெங்கடரங்கம் பிள்ளைத் தெருவில் அமைச்சர் மா. முத்துசாமி துவக்கிவைக்கிறார்; அமைச்சர் இரா. நெடுஞ்செழியனும் கலந்துகொள்வார்.

மயிலாப்பூர்

84-வது வட்டம் பஜார் ரோடில் திரு. இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. துவக்கிவைப்பார்.

தியாகராயநகர்

93-வது வட்டம் தர்மாபுரத்தில் திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., முன்னாள் மேயர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் துவக்கிவைப்பர்.

சைதாப்பேட்டை

92-வது வட்டம் கோடம்பாக்கம் கண்ணு மேஸ்திரி திடலில் அமைச்சர் திரு. மு. கருணாநிதி துவக்கிவைக்கிறார்.

ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள சீரணித் தொண்டர்கள் காலை 7-30 மணிக்குள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேருமாறு சீரணித் தனி அதிகாரி திரு. பரமசாமி கேட்டுக்கொள்கிறார்.

கலைவாணர் விழா

கலைவாணரின் 11-வது ஆண்டு நினைவுநாள் விழா கவி அரங்கம்; 3—9—67 காலை 8-30 மணிக்கு தியாகராய நகர் வாணி மகாலில் கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் நடைபெறும்; அமைச்சர் செ. மாதவன் தொடங்கிவைப்பார்; கவிஞர்கள் பலர் பங்கேற்பர்.

4—9—67 மாலை 5-30 மணிக்கு, நாரண துரைக்கண்ணன் தலைமையில், நடிகர் ஜெமினி கணேசன் விழாவைத் துவக்கிவைப்பார்; அமைச்சர் கே. ஏ. மதியழகன், அன்பில் தருமலிங்கம், மற்றும் பலர் சிறப்புரையாற்றுவர்; தெருக்கூத்தும் நடைபெறும்.

தா. கிருட்டினன்

எம்.பி. சுற்றுப்பயணம்

செப். 3 : பரமக்குடி; 4 : சத்திரக்குடி ; 5, 6 : திருப்பத்தூர் வட்டம் ; 7 : மதுரை—திருமணம்; 8 : சோலைபட்டி—திருமணம் ; 9 : பெரியகோட்டை ; 10 : இடைக்காட்டூர் ; 11 : வீரனேந்தல், சங்கங்குளம் (மானமதுரை தொகுதி); 12, 13 : பரமக்குடி வட்டம் ; 14 : மானமதுரை—திருமணம் ; 15 : மானமதுரை — எம்.ஜி.ஆர். மன்ற ஆண்டு விழா ; 16, 17 : மதுரை ; 18, 19 : திருவாடானை வட்டம் ; 20 : தளவாய்புரம் ; 21 : திருவில்லிபுத்தூர்; 22 : சாத்தூர்; 24 : இராஜகெம்பீரம்.

புதுவையில் அறிஞர் அண்ணா

ஆளுநர் மாளிகையில் வரவேற்பு

புதுவை, செப். 1—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், இன்று விருத்தாசலம் போகும் வழியில் புதுவைக்கு அதிகாரச் சார்பற்ற முறையில் வருகைபுரிந்தார்கள்.

அண்ணா அவர்களின் வருகையின்போது புதுவை ஆளுநரோ, முதலமைச்சரோ நகரில் இல்லாததால், ஆளுநரின் செயலாளர் திரு. சி. இராமு, ஆளுநர் மாளிகையில் அண்ணா அவர்களை வரவேற்றார்.

போலீசு ஐ. ஜி. திரு. பி. பரமகுரு, பாதுகாப்புக்கு உடன் வந்திருந்தார்.

அண்ணா அவர்கள், கவிஞர் பாரதிதாசனின் பேத்தி திருமணத்திற்குத் தலைமைவகிப்பதற்காக நல்லாத்தூர் சென்றார்.

அண்ணா அவர்களை நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள் மாலையணிவித்து வரவேற்றனர்.

புதுவை மாநிலத் தலைமை நீதிபதி திரு. மகாராஜனும் அண்ணா அவர்களை, ஆளுநர் மாளிகையில் சந்தித்தார்.

மஞ்சள் புடவையின் மகத்துவம்!

நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டாலோ அல்லது முக்கியமான பிரச்சினை ஏதாவது விவாதிக்கப்பட்டாலோ அன்று தலைமை அமைச்சர் இந்திரா காந்தி மஞ்சள் புடவை அணிந்துகொண்டு வருகிறாராம்!

“யாரோ சோதிடர் கூறித்தான் இவர் இப்படி மஞ்சள் புடவை அணிந்துவருகிறார்” என்று உறுப்பினர்கள் ‘கு சு மு சு’ வென்று பேசிக்கொள்கிறார்களாம்!

—‘தினமான்’ : 20-8-67

நன்றி-- மகிழ்ச்சி!

‘மதுவிலக்குக் கொள்கையைக் கைவிடப் போவதில்லை’ என்று தமிழக முதலமைச்சர் மீண்டும் உறுதி தெரிவித்திருப்பதனை நேற்று புதுடில்லியில்கூடிய அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள், பாராட்டு கலந்த பிரதிபலிப்பினைக் காட்டியிருப்பதாக, ‘மெயில்’ இதழின் செய்தியாளர் எழுதியுள்ளார்.

அநாதைக் குழந்தையாகிறது மதுவிலக்குக் கொள்கை!

பொறுப்பினைப் பந்தாடுகின்றனர் பொறுப்புள்ள அமைச்சர்கள்!

‘ஆளைவிடு’ என்கிறார் சவாண்--‘நான்தானா கிடைத்தேன் என்கிறார் அசோக் மேத்தா

காந்தியார் கொள்கை -- காங்கிரசு அமைச்சர்களிடம் படும்பாடு!

“மத்திய அரசினரிடம் மதுவிலக்குக் கொள்கை, ஓர் அனாதைக் குழந்தையாகிவிட்டிருக்கிறது!

“தற்போது அந்தப் பொறுப்பினைப் பார்த்துவரும் உள்துறை அமைச்சர் சவாண், ‘எனக்கு வேண்டாம் அந்த வேலை’ என்கிறார்!

“அத்துடன் அவர், ‘அசோக் மேத்தாவின் சமுதாய நல இலாகா, மதுவிலக்குப் பொறுப்பினையும் பார்க்கலாமே’ என்று தட்டிக்கழிக்கும் போக்கில் யோசனை ஒன்றையும் தந்திருக்கிறார்!

“ஆனால் மேத்தாவோ, ‘எனக்கு வேண்டாம் அந்தத் தொல்லை’ என்று தூர ஒதுங்கி நிற்க முயற்சிப்பதாகத் தெரிகிறது!

“மதுவிலக்குக் கொள்கை, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்திலேயே நீடிக்கிறதோ அல்லது அசோக் மேத்தாவின் இலாகாவாக மாறுகிறதோ தெரியாது; ஆனால், அது, இதுவரை பெற்றிருந்த முக்கியத்துவத்தை இழந்து ஓர் அநாதைக் குழந்தையாகி இருப்பது என்னவோ உண்மை!”

இவ்வாறு கல்கத்தா ‘ஸ்டேட்ஸ்மென்’ 1—9—67 இதழில், அதன் புதுடில்லி சிறப்புச் செய்தியாளர் எழுதியுள்ளார். இத்தொடர்பில் அவர் மேலும் தந்துள்ள தகவல்கள் வருமாறு:—

“‘1970 சனவரி 30-ந் தேதிக்குள் நாடு முழுவதிலும் மதுவிலக்கு அமுலாக வேண்டும்’ என்ற தேக்சந்த் குழு அறிக்கை தோல்வியையே சந்திக்கும்’ என்று மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் கருதுகிறது.

அரசியல் சட்டம் வழிகாட்டும் கொள்கைகளின்படி, எல்லா மாநிலங்களையும், ‘மதுவிலக்கினை முழுமையாக அமுலாக்க வேண்டும்’ என்ற உத்தரவை மத்திய அரசு போடவேண்டும். அப்படிப் போட்டால், ‘மதுவிலக்கினால் மாநிலங்கள் அடையும் நஷ்டஈட்டினைக் கொடுக்கும் நிலையிலும் நாம் இருக்கவேண்டும்’ என்ற நிலைமையினை உள்துறை அமைச்சகம் மத்திய அரசுக்குத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

திட்டக் குழுவின் அறிக்கை ஒன்றின்படி, மதுவிலக்கு அமுலாவதால் மாநிலங்கள் ஆண்டுதோறும் ரூ. 65 கோடி வருவாயை இழக்கின்றன; இதில் ரூ. 9 கோடி, மதுவிலக்கை அமுலாக்கும் நிர்வாகச் செலவுக்குப் போகிறது!

தற்போது மதுவிலக்கு இருக்கும் மாநிலங்களைவிட மதுவிலக்கு ரத்தான மாநிலங்கள்தான் அதிகம்!

தமிழகம், மகாராட்டிரம், குசராத் மாநிலங்கள் போக எஞ்சியவை முழுமையாகவோ, பகுதியாகவோ மதுப் புழக்கத்தைக் கொண்டிருக்கின்றன!

மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப் அரியானா, இராஜஸ்தான், ஜம்மு-காஷ்மீர், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களும் மதுவிலக்கை ரத்து செய்துள்ளன!

மொத்தமாகப் பார்க்கும்போது, நாடு முழுவதுக்குமான முழு மதுவிலக்கு என்பது முடியாத காரியமாகத்தான், தற்போதைய சூழ்நிலைகளின்படி தென்படுகிறது!”

ரோஜா பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

3--9--67

சென்னை 92-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரா. சடகோபன், ஆர். டி. பாஸ்கரன் ஆகியோருக்குப் பாராட்டு; மாலை 6-மணிக்கு வடபழனி சிங்காரவேலர் திடலில்; தலைவர் : மா. செங்குட்டுவன் ; பேசுவோர் : கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., அமைச்சர் சாதிக் பாட்சா பி ஏ., பி.எல்., காஞ்சி மணிமொழியார், சா. கணேசன் எம்.சி., எம். குமார், சோ. கி. மூர்த்தி, செ. கண்ணப்பன், செ. இளங்கோ, க. துரை, மதனகோபால், எம். எஸ். இராமச்சந்திரன், நெடுமாறன், கஜபதி.

4--9--67

சத்திரக்குடி

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு மரைக்காயர் இல்லம் முன்பு; தலைவர் ; டி. கே. சிறைமீட்டான் எம்.எல்.ஏ., பேசுவோர் : தா. கிருட்டிணன் எம்.ஏ., எம்.பி., அக்கினிராசு பி.ஏ., எம்.எல்.ஏ., வீ. மலைக்கண்ணன் பி.ஏ., எம்.எல்.ஏ., த. தங்கப்பன் எம்.எல்.ஏ., மு. சாத்தையா எம்.ஏ., சுப. தங்கவேலன், அ. வே. அரவரசன்.

மேட்டுப்பாளையம்

தி. மு. க. சார்பில்; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சு. துரைசாமி எம்.எல்.ஏ., மே. சி. தூயமணி.

திருவள்ளுவர் விழா

தமிழ்நாடு அரசிதழ் பதிவுரு அலுவலர் ஒன்றிப்பு செங்கற்பட்டு மாவட்டக் கிளையின் சார்பில், 4—9—67 மாலை 6 மணிக்கு சென்னை நந்தனம்—செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் பணிமனைத் தோட்டத்தில், திருவள்ளுவர் விழா நடைபெறும்; திரு.சு. நாராயணன் தலைமைவகிப்பார்; மாவட்ட ஆட்சியர் திரு. கே. இலட்சுமிகாந்தன் பாரதி விழாவைத் துவக்கிவைப்பார்; வரவேற்பு : ச. நவநீத கிருஷ்ணன் ; சிறப்புரை : பி. ஆர். கோகுலகிருஷ்ணன் ; திருவள்ளுவர் படத்திறப்பு : மாண்புமிகு அமைச்சர் செ. மாதவன்.

கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

செப். 4 : மாலை 5-30 மணி : கோவை—ப.சா.கோ. பொறியியல், பல்தொழில் கல்லூரி, மொழிகள் மானிடவியல் மன்றத்தின் பாரதி விழா; இரவு 7 மணி : மேட்டுப்பாளையம்—பொதுக்கூட்டம்;

செப். 5 : காலை 9-30 மணி : கோவை — இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம் பார்வையிடல்; 10 மணி : ஆசிரியர் வித்தியாலயத்தில்; 11-30 மணி : அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி பார்வையிடல்; பகல் 12 மணி : பாரதி விழா—மனையியல் கல்லூரியில்; மாலை 3-30 மணி : அரசினர் பொறியியற் கல்லூரியில் சொற்பொழிவு; மாலை 5 மணி : கோவை கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரி நிறுவனர் நாள் விழா துவக்கம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13)